# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.6 (L.W.3)
# SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Antony Raja |
| Father Name | : | |
| Occupation | : | Head Constable, Chennai |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.10.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 11.45 p.m**

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை மாவட்ட குற்ற ஆவண காப்பக பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 2006 ஆம் வருடம் ஆயுத படையில் காவலராக பணியில் இருந்தேன். 21.03.2006 அன்று சீனிவாசன் அவர்களின் தலைமையில் சுமார் 10 பேர் விரிஞ்சிபுரம் காவல் நிலையம் சென்று அங்கிருந்து உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் மற்றும் வேலூர் தாலூக்கா காவல் ஆய்வாளர் திரு. வெங்கட், அனைவரும் சேர்ந்து காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சுமார் மாலை 04.30 மணிக்கு சென்றோம். பிறகு சாராயம் வேட்டை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்கள். அங்கிருந்து சிவநாதபுரத்திற்கு சுமார் மாலை 06.00 மணிக்கு விரிஞ்சிபுரத்திலிருந்து சுமார் 10 பேர் சீனிவாசன் RSI. சிவாஜி. ஜீவரத்தினம், சுரேஷ்பாபு, சத்யநாராயணன். குமார், தனஞ்செயன், குகன், மற்றொருவரின் பெயர் தெரியவில்லை. உடன் 2 காவல் உதவி ஆய்வாளர்( வேலூர் மற்றும் விரிஞ்சிபுரம்) வந்தார்கள் அனைவரும் போலீசார் வாகனமான TN 23 0394 என்ற வாகனத்தில் சென்றோம். காவல் துணை கண்காணிப்பாளர் வந்தார். சிவநாதபுரம் கையிலாய மலை திப்பையிடம் சென்று பார்த்தோம். நாங்கள் அனைவரும்

சீருடையில் தான் போனோம். அங்கு 4 பேர் இருந்தார்கள். அந்த 4 பேரிடம் சுமார் 4, 5 பேர் சாராயம் குடித்து கொண்டிருந்தார்கள். அந்த 4 பேர்கள் நடுபையன், சடையன், முனிரத்தினம், வெங்கடேஷ் ஆவர். மேற்படி சொன்ன 4 பேரும் சாராயம் விற்று கொண்டிருந்தார்கள். நாங்கள் போவதை பார்த்து குடித்து கொண்டிருந்தவர்கள் தப்பி ஓட ஆரம்பித்தார்கள். விற்று கொண்டிருந்த 4 பேரும் அங்கேய இருந்தார்கள். அதில் நடுபையன் "போலீஸ் காரங்க தெவிடியா பசங்கா எங்க பொழப்ப கெடுக்க வந்துட்டாங்க நாயுங்க தெவிடியா பசங்கள சுட்டு தள்ளனும்" என்று சொல்லி கொண்டு துப்பாக்கி எடுத்து சுட்டார். அந்த துப்பாக்கி இங்கு நீதிமன்றத்தில் உள்ள இரண்டு துப்பாக்கிகளில் பெரிய துப்பாக்கி ஆகும். சடையன் என்பவரும் எங்களை துப்பாக்கி சுட குறி வைத்தார். பின்னர். சரவணன் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் துப்பாக்கியை கீழே போட்டுவிட்டு சரணடையும்படி எச்சிரிக்கை கொடுத்தார். சடையன் வைத்திருந்த துப்பாக்கியானது நீதிமன்றத்தில் உள்ள உயரம் குறைவான துப்பாக்கியாகும். அந்த துப்பாக்கிகள் ஏற்கனவே சான்று பொருள் 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுதான்.

காவல் துணை கண்காணிப்பாளர் கொடுத்த எச்சரிக்கையை அவர் கேட்பதாக இல்லை. எங்களை பாதுகாக்கவும் அவரை பாதுகாக்கவும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மணி என்கிற நடுபையன் என்பவரை பார்த்து வலது காலில் முட்டிக்கு கீழே சுட்டார். சுட்ட பிறகு வெங்டேசனை நானும் உடனிருந்த குகனும் பிடிக்க சென்றோம். அப்போது அவர் கத்தி வைத்திருந்த வலது கை தோள்ப்பட்டையிலும் மற்றும் இடது கையிலும் மார்பிற்குமேலும் கிழித்து விட்டார். ( சாட்சி வலது கையில் உள்ள சுமார் 1.5 இன்ச்க்கு மேல் உள்ள வெட்டு காய தழும்பை காட்டினார். மார்பில் சுமார் 1 இன்ச்க்கான தழும்பு இருந்ததாகவும் தற்போது மறைந்துவிட்டதாகவும் தெரிவித்தார், இடது கையில் சுமார் 1.5 இன்ச்க்கான தழும்பை காண்பித்தார்) என்னை அவ்வாறு தாக்க பயன்படுத்திய கத்தி சா.பொ. 5 ஆக ஏற்கனவே

குறியீடு செய்யப்பட்டுள்ளதுதான்.

சீனிவாசன், உதவி ஆய்வாளர் என்பவரால் முதல் உதவி சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் 10 பேர் சேர்ந்து ரெய்டுக்கு போனதாக சொல்வது தவறு என்றாலும் நான் சொன்னது போல் அங்கு 4 பேர் சாராயம் விற்று கொண்டிருக்கவில்லை என்றாலும் புள்ளி விவரத்திற்காக அந்த 4 பேர் சாராயம் விற்று கொண்டிருந்ததாகவும் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த இடத்தில் முனிரத்தினம் இல்லவே இல்லை என்றாலும் அவர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கே போகவில்லை என்றாலும் 4 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் 4 வது எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராவதற்காக வழக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது.** நேரம்–12.05 p.m

1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லாததாலும் எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரிலும் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம்: 02.35 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.10.22 21:01:12 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்